www.tnpscquestionpapers.com

A.P.P Grade II 23-7-11

YOGI

Register Number

# 2011

# LAW — Paper I

**( The Indian Penal Code, Final Report and Framing of Charges including Translation )**

**( Tamil & English Versions )**

Duration : 3 Hours ] [ Max. Marks : 100

விண்ணப்பதாரர்களுக்கு அறிவுரைகள் : **அனைத்துப்** பகுதிகளுக்கும் விடையளிக்கவும்.

*Instruction to the Candidates :* Answer *all* the Sections.

பகுதி – 'அ'

மொழிபெயர்ப்பு

**SECTION – A**

**Translation**

*குறிப்பு :* இருவினாக்களுக்கும் விடையளி.

*Note :* Answer both the questions.

( மதிப்பெண்கள் / Marks : 2 × 10 = 20 )

1. பின்வரும் பத்தியை தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்க / *Translate the following passage into Tamil :* ( 10 marks )

Not merely is the office of Public Prosecutor a public office, but it is a public office of considerable significance, for the integrity and efficiency of the administration of criminal justice. Anyone appointed to this office, in the interest of public, must have a high degree of efficiency and knowledge of the law of

www.tnpscquestionpapers.com



crimes and the criminal procedure; he must have character and integrity, that are irreproachable and above suspicion ; he must have a sense of his duty to the public and to the court as overriding considerations. As can be immediately realised, if these requisites are lacking, the incumbent to such an office can gravely injure the administration of criminal justice. The ideal public prosecutor is not surely concerned with securing convictions, or with satisfying the departments of State Government with which he has to be in contact. He must consider himself as an agent of justice.

2. பின்வரும் பத்தியை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்க / Translate the following passage into English : ( 10 marks )

சாட்சியம்

என் பெயர் கிருஷ்ணன். நான் இராமன் சாலையில் வசித்து வருகிறேன். நான் மாட்டு வியாபாரியாக இருக்கிறேன். ஒன்று மற்றும் இரண்டு எதிரிகளை எனக்குத் தெரியும். அ.த.சா. 1 ஐயும் எனக்குத் தெரியும். எதிரிகள் 1, 2 மற்றும் அ.த.சா. 1 ஆகியோர் உறவினர்கள். அவர்களிடையே வீட்டு மதில் சுவர் குறித்து சிவில் வழக்கு நடக்கின்றது. சம்பவத்தன்று காலை இரு குடும்பத்தாரும் சண்டை போட்டுக் கொண்டார்கள். அன்று மாலை சுமார் 5 மணிக்கு எதிரிகள் 1 மற்றும் 2, அ.த.சா. 1 ன் வீட்டிற்கு வந்து தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி அவரை திட்டினார்கள். திடீரென முதல் எதிரி பையில் மறைத்து வைத்திருந்த கத்தியால் அ.த.சா. 1 ன் மார்பின் வலது பக்கத்தில் குத்தினார். இரண்டாவது எதிரி அவர் எடுத்து வந்த கம்பினால் அ.த.சா. 1 ஐ ஓங்கி அடித்தார். அ.த.சா. 1 ன் மகன் அ.த.சா 2 தடுக்க வந்தார். அவர் கையிலும் காயம் ஏற்பட்டது. நானும் அ.த.சா. 2 ம் அ.த.சா 1 ஐ மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவமனையில் நினைவு வந்தவுடன் போலீசாரிடம் அ.த.சா. 1 நடந்த சம்பவம் குறித்து வாக்குமூலம் கொடுத்தார். நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்துப் போட்டேன். போலீசார் என்னை விசாரிக்க நான் நடந்ததைச் சொன்னேன்.

www.tnpscquestionpapers.com



## ( Tamil Version )

### பகுதி – 'ஆ'

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

*குறிப்பு :* வினா எண் 3 க்கு கட்டாயமாகவும் மற்றும் இதர ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

3. (அ) அல்லது (ஆ) ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக :

அ) இந்திய தேசிய வங்கி, தங்க கட்டிகளை இந்திய விற்பனைக்காக இறக்குமதி செய்து வந்தது. ஒவ்வொரு கட்டியும் சீரான அளவு, எடை, மாற்று உடையனவாகவும் மேலும் 'இந்திய தேசிய வங்கி' என்ற வார்த்தைகளை குறியீடாக பொறிக்கப்பட்டனவாகவும் இருந்தன. இப்படி இறக்குமதி செய்யப்பட்ட தங்க கட்டிகள் 'நசரானா பாக்' என்று அறியப்பட்டன, மேலும் சந்தையில் ஒரு சிறப்பான மதிப்பை பெற்றிருந்தன. *A* என்பவர், அவர்களது சொந்த தயாரிப்பில் செய்த தங்க கட்டிகளை 'நசரானா பாக்' என்று பொறித்து சந்தையில் புழக்கத்தில் விட்டார். *A* என்ன குற்றம் புரிந்தார் அவருக்கு தண்டனை என்ன என்பதை விவரிக்க.

ஆ) *B* என்பவர் *C* என்ற கட்சியின் மாநில செயலாளராக இருக்கிறார். *A* எனும் குற்ற முறையீட்டாளருக்கு எதிரான ஒரு கட்டுரையை *B*, *D* என்ற வாரப் பத்திரிக்கையில் வெளியிடுகிறார். *A*, மாநில முதல்வர் *X* ன் மகனாவார். *B* வெளியிட்ட செய்திகளில் ஒன்று என்னவென்றால், '*A* கள்ளக் கடத்தல்காரர்களின் தலைவர் மட்டுமல்ல; அவர் மாநிலத்தில் இழைக்கப்படும் அநேக குற்றங்களுக்கு பொறுப்பாளியும் ஆவார்'. மேலும் சொல்லப்பட்ட செய்தி, "குற்றவாளி, முதல்வர் மகன் என்ற காரணத்தினால் வழக்குகள் மழுப்பப்படுகின்றன." *A* க்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றம் யாது ? என்பதை விவரிக்க.

4. இந்திய தண்டனைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு தனிமனிதன் தன் உயிர், உடல் பாதுகாப்பு உரிமை குறித்து விளக்குக.

5. 'குற்றமுறு சொத்துக்கையாடல்' என்பது யாது ? அடிப்படையில் எத்தகைய நபர்கள் இவ்வகை குற்றங்களை இழைப்பதற்கு ஏதுவானார்கள் என்பதை விவரிக்க.

6. குற்றம் இழைப்பதற்கான முயற்சி என்பது குறித்த சட்டம் பற்றி விளக்குக. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 307 மற்றும் 511 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து உண்மை நிலை ஆராய்க.

www.tnpscquestionpapers.com



7. காயம் விளைவித்தல் மற்றும் கொடுங்காயம் விளைவித்தல் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

8. பின்வரும் வழக்குகளில் அறுதியிடப்பட்ட கோட்பாடுகளை விளக்குக :

அ) மெக்நாட்டன் வழக்கு

ஆ) டி. வி. வைத்தீஸ்வரன் *எதிர்* தமிழக அரசு AIR 1983 SC361

9. பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு மட்டும் சிறுகுறிப்பு எழுதுக :

அ) பொதுநோக்கம் மற்றும் தூண்டுதல்

ஆ) பொது அமைதி காத்தல்

இ) குற்ற ஆயத்தம் மற்றும் குற்ற முயற்சி.

## பகுதி – 'இ'

( மதிப்பெண்கள் : 2 × 10 = 20 )

*குறிப்பு :* இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். இரு வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

10. குற்ற விசாரணை ஆட்சி வட்டாரம் சட்டப்படி சொல்லப்பட்டுள்ள குறிப்பிட்ட நாட்களுக்குள் காவல் இறுதி அறிக்கை ( Final report ) தாக்கல் செய்ய தவறும் நிலையில் குற்றவாளியின் உரிமைகள் பற்றி ஆராய்க.

11. அ) 'குற்றச்சார்த்து'களை இணைத்தல் மற்றும் குற்றஞ்சார்த்தபட்ட நபர்களை இணைத்து குற்றச்சார்த்து வனைதல் ஆகியவற்றை விளக்குக.

ஆ) பின்வரும் பொருண்மைகளின் அடிப்படையில் உரிய குற்றச்சார்த்து வனைக.

*A*, *B* மற்றும் *C* முறையே *X* எனும் கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆவர். *X* சங்கத்தின் பெயரால் இயற்றப்படும் ஆவணங்கள் மற்றும் காசோலை ஆகியவற்றில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர்கள் *B* மற்றும் *C* ஆவர். 16/08/07 தேதியில் *A* தலைவர் தன் கையொப்பமிட்டு ரூ. 1,00,000 க்கான ஒரு காசோலையினை தன் மகனுக்கு கொடுக்கிறார். மேலும் இது சம்பந்தப்பட்ட ஆவணங்களை தயார் செய்து அந்த தொகை ரூ. 1,00,000-தை தனது, சென்னை மயிலையில் நடக்கும் கட்டுமானப் பணிக்கு பயன்படுத்துகிறார். 2006 ம் ஆண்டு வரை *A* கையொப்பமிடும் அதிகாரம் பெற்றவராக இருந்திருக்கிறார்.

www.tnpscquestionpapers.com



( English Version )

## SECTION – B

( Marks : 5 × 12 = 60 )

*Note :* Answer Question No. 3 and any other *four* questions. *All* questions carry equal marks.

3. Answer either (a) or (b) :

a) The National Bank of India used to import bars of gold for sale in India. Each bar was of uniform size, weight and purity and had the words 'National Bank of India' inscribed on it as property mark. The gold so imported was known in the market as 'Nasarana Bak' and acquired a special value in the market. *A* placed in the market gold of their own make with words 'Nasarana Bak' inscribed on their bars.

Discuss the crime committed by *A* and the punishment therein.

b) *B* was the then state secretary of a party named *C*. *B* had published in a weekly *D* an article against the complainant *A*, who happened to be the son of the State's Chief Minister *X*. One of the said alleged statements was that, *A* was not only a leader of the smugglers but that he was also responsible for a large number of crimes in the state. It also added that because the culprit happens to be Chief Minister's son, the cases are also shelved up.

Discuss the offence, if any, committed against *A*.

www.tnpscquestionpapers.com



4. Discuss in detail the right of private defence against person as provided under Indian Penal Code.

5. What is misappropriation and basically which set of persons are vulnerable to commit such offences ?

6. Discuss the law relating to attempt to commit a crime and point out the scope and nature of attempt u/s 307 and 511 of Indian Penal Code.

7. Distinguish between the offences of causing hurt and grievous hurt.

8. Explain the principles laid down in the following cases :

   a) McNaughten case

   b) T. V. Vaitheeswaran *vs* State of Tamil Nadu AIR 1983 SC 361.

9. Write short notes on any *two* of the following :

   a) Common intention and abetment

   b) Public tranquility

   c) Preparation and attempt an offence.

www.tnpscquestionpapers.com



## SECTION – C

( Marks : 2 × 10 = 20 )

*Note* : Answer both the questions. Both the questions carry equal marks.

10. Examine the rights of an accused person while the final report was not filed within the stipulated time by the investigating agency.

11. a) Explain the procedures to be allowed in joinder of charges and persons who could be jointly charged.

b) Frame the necessary charge on the following facts :

*A*, *B* and *C* were the President, Secretary and the Treasurer of the Co-operative Society *X* respectively. *B* and *C* were the authorised signatories of any document or cheque issued in the name of *X*. *A*, the President on 16. 08. 2007 signed a cheque and issued in favour of his son for an amount of Rs. 1,00,000 and created documents to enjoy the society's funds for his construction purposes at Mylapore, Chennai. *A* was authorised signatory till 2006.